# பள்ளிக்கல்வித் துறை

மேனிலைப் பள்ளிகளுக்கான கற்றல் கட்டகம்

அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 2016–17ஆம் கல்வியாண்டில் மேனிலைப் பள்ளிகளின் கற்றல் தரத்தினை உயர்த்தித் தேர்ச்சி விழுக்காட்டினை மேம்படு த்துவதற்கென தமிழ், ஆங்கிலம், கணக்கு, இயற்பியல், வேதியியல், உயிரி–தாவரவியல், உயிரி–விலங்கியல், புவியியல், வரலாறு, பொருளியல், வணிகவியல், கணக்குப்பதிவியல் ஆகிய பாடங்களுக்கான கற்றல் கட்டகங்களை உருவாக்கி உள்ளது.

குறைந்த மதிப்பெண் பெறும் மாணவனைத் தேர்ச்சிபெறத் தகுதிப்படுத்துவதும், தேர்ச் சியின் விளிம்பில் இருக்கும் மாணவனை அதிக மதிப்பெண் பெற வைப்பதும், அதிக மதிப்பெண் பெற்று வருகின்ற மாணவர்களை முழு மதிப்பெண் பெற வழிகாட்டுவதற்குமான இலக்குகளை முன்னிறுத்தி இக்கட்டகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரசின் வினாத்தாள் திட்ட வரைவின் அடிப்படையில் மாணவர்களின் தேர்ச்சி விழுக்கா ட்டினை அதிகரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இக்கட்டகத்தினை மாணவர்களுக்கு நன்முறையில் எடுத்துச் சென்று, மாணவர்களைத் தேர்வுகளை எதிர்கொள்ளத்தக்க துணிவும் தன்னம்பிக்கையும் மிக்கவர்களாக உருவாக்குமாறு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயி ற்சி நிறுவனம் அனைத்து ஆசிரியப் பெருமக்களையும் கேட்டுக் கொள்கிறது.